8. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களுக்கு சட்டமன்ற வளாகத்தில் மதிய உணவு வழங்க ஏற்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. இராமசாமி, உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று விவாதம் தொடர்ந்து நடைபெற உள்ளதால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்று (*21–7–2009*) பிற்பகல் *1–00* மணி முதல் சட்டமன்ற வளாக பிளாசாவில் மதிய உணவு வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்

(ஆ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை

(இ) கோரிக்கை எண் 16—நிதித் துறை

(ஈ) கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(உ) கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

}—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு, நான் சார்ந்திருக்கின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டமன்றப் பேரவை அலுவலகத்தில் காலியாக இருக்கின்ற A.S.O., Assistant, Typist போன்ற பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும்போதும் தற்காலிகமாகப் பணி புரிகின்ற தட்டச்சர், அலுவலக உதவியாளர்களை நிரந்தரப்